தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

ஆணை நாள்.18.11.2026

முன்னிலை

திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண். SA 105/H/2024

திருமதி. சுகன்யா — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர், — பொது அதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்-602001.

ஆணை

இவ்வாணையத்தால் இவ்வழக்கின் மீது 11.08.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பின்வருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது:-

> "இன்றைய விசாரணைக்கு மனுதாரர் நேரில் ஆஜராகி அவரது கருத்தினைத் தெரிவிக்க தவறியுள்ளார். பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல் போதுமானதாகக் கருதி, இந்த மனு முற்றாக்கம் செய்யப்படுகிறது.
> பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு காலதாமதமாக தகவல் வழங்கப்பட்டுள்ளதனை ஆணையம் பதிவு செய்கின்றது. தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 7-இன்படி விண்ணப்பத்தை பெற்ற 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை முழுமையாக வழங்க பொது தகவல் அலுவலர் தரக் கடமைப்பட்டவராவார். இந்நிலையில் சுமார் 2 ஆண்டுகள் கழித்து மனுதாரருக்கு பொது அதிகார அமைப்பால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. ஆதலால் அப்போதைய பொது தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 20(1)-இன்கீழ் அதிகபட்ச தண்டமாக ரூ.25,000/- ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கு அவரது எழுத்து மூலமான விளக்கத்தினை அவரிடமிருந்து பெற்று, 18.11.2026 அன்று ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, சமர்ப்பிக்க இன்றைய தினம் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொது தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருவள்ளூர் அவர்களுக்கு இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது."

மேற்கண்ட உத்தரவின் தொடர்ச்சியாக, இன்று (18.11.2026) நடைபெற்ற விசாரணையின்போது, பொது தகவல் அலுவலரும், தலைமையிடத்து துணை

வட்டாட்சியருமான திருமதி எம். சுகன்யா, அவர்கள் ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, ந.க.எண்.3922/2026/RTI, நாள்.16.11.2026 தேதியிட்ட அறிக்கையினை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார். பொது தகவல் அலுவலர் சமர்ப்பித்த அறிக்கையை ஆணையம் பரிசீலனை செய்தது. எனினும், அவ்விளக்கத்தை ஆணையம் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

- **மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-இன்கீழ் தாக்கல் செய்த விண்ணப்பத்தில் கோரியிருந்த தகவல்களை உரிய காலத்திற்குள் வழங்காமல் காலதாமதப்படுத்தி சுமார் 2 ஆண்டுகள் கழித்து மனுதாரருக்கு வழங்கி, மனுதாரரை அலைகழித்த காரணத்தினால், இன்றைய விசாரணையின்போது ஆஜரான பொது தகவல் அலுவலர் ஒப்புக்கொண்டதன் பேரில் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(8)(b)-ன்படி ரூ.2,000/-ஐ (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) (வரைவோலையாக) இழப்பீடாக மனுதாரருக்கு வழங்குமாறு (பொது தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருவள்ளூர்) அன்றைய பொது தகவல் அலுவலருக்கு இவ்வாணையத்தின் வாயிலாக உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு இழப்பீட்டுத் தொகையான ரூ.2,000/- மனுதாரருக்கு வழங்கப்பட்டதற்கான இரசீதியின் நகலினை இவ்வாணையத்தில் 29.12.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொது தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருவள்ளூர் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

- **மேலும், மனுதாரர்களின் வாயிலாக விண்ணப்பிக்கப்படும் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 6(1) மனுக்களுக்கு உரிய காலத்திற்குள் தகவல்கள் வழங்கப்படவேண்டுமென்று பொது தகவல் அலுவலருக்கு இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.**

ஒம்/-(அ. விஜயராம்)
மாநிலத் தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப்பதிவாளர்

வழக்கு எண். SA 105/H/2024
பெறுநர்
பொது அதிகார அமைப்பு
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்-602001.

மேல்முறையீட்டாளர்
திருமதி. சுகன்யா,
எண்.717 யாதவர் தெரு,
பெருமாள்பட்டு கிராமம்,
திருவள்ளூர்-602024.
தொலைபேசி - 7904332916.

Copy to: file. GP/PC